**அனுராதபுரம் மாநகர சபையி - 2022**

**-------------------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அனுராதபுரம் மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று / தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அனுராதபுரம் மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் மோட்டார் வாகனம் மற்றும் வண்டில் என்பன ரூபா.4,069,569 இற்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா.4,802,626 என ரூபா.733,055 கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் வடிகால் வாகன சேவைக் கட்டணம் ரூபா.334,400 எனக் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் கணக்கினைத் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | -மேற்படி- |
| (இ) | முன்னைய வருடத்திற்கு உரிய ரூபா.24,740,979 முத்திரைக் கட்டண வருமானம் திரண்ட நிதிக்கு சரி செய்வதற்காக மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சரி செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் எந்த வருடத்திற்கு உரியது என்பதைச் சரியாக இனம் காண்பது சிரமம் என்பதால் கிடைக்கும் பரிந்துரைக்கப்பட்ட பெறுமதியை மீளாய்வாண்டுக்கு உரிய பெறுமதியாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது. | முத்திரைக் கட்டணம் உரித்தாகும் வருடத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாது மீளாய்வாண்டுக்கு உரிய உறுதிப்படுத்தப்பட்ட ரூபா.19,000 முத்திரைக் கட்டணம் மட்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மீளாய்வாண்டுக்கு உரியதாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டதன் அடிப்படைக்கு அமைய கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் மேற்கொள்ளப்படும் சொத்து மீள்மதிப்பீட்டிற்கு அமைய மீள்மதிப்பீட்டு இலாபம் ரூபா.34,491,648 ஆக இருந்த போதிலும் அது ரூபா.4,802,626 என ரூபா.29,689,022 குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் நிதிக் கூற்றில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு உரியதான திரண்ட தேய்மானம் ரூபா.30,828,378 மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் நீக்கப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் நிதிக் கூற்றுகளில் ஆரம்ப மீதியை சீர்செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | உரிய சரி செய்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (எ) | 2021 ஆம் ஆண்டில் வீதி நிர்மாண சொத்து அதிகரிப்பு ரூபா.19,357,320 இற்கு உரியதாக மீளாய்வாண்டில் சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களில் ரூபா.1,935,732 தேய்மானம் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் நிதி கூற்றுக்களின் ஆரம்ப மீதியை சீர் செய்வதன் மூலம் தேய்மான பெறுமதி.யைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தேய்மானம் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் ரூபா.37,886,022 பெறுமதியான கட்டட நிர்மாணமானது வீதி மற்றும் நிர்மாணத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் நிதிக் கூற்றில் ஆரம்பம் மீதியை சீர் செய்வதன் மூலம் இந்த சொத்து மீதியை காணி கட்டடம் மற்றும் வீதி நிர்மாணம் என வேறு வேறாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கட்டட நிர்மாணம் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டில் ரூபா.27,459,612 பெறுமதியான வீதி மற்றும் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதிலும் அது ரூபா.84,702,954 என ரூபா.57,243,342 கூடுதலாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இனம் காணப்பட்டிருந்தது. | குறிப்பு இலக்கம் - 16 பேரேட்டு கணக்கை சரி செய்து சமர்ப்பிக்கப்படும் என்பது. | சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா.29,423,745 செலுத்தப்பட்டிருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயல்பாடுகளின் கீழ் சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் ரூபா.92,964,797 என ரூபா.63,541,052 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | வருடத்தில் நன்கொடை பெறுகையாக சரி செய்யப்படுதல் வேண்டும். | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஓ) | 2021 ஆம் ஆண்டுக்கு உரியதான இனம் காணப்பட வேண்டிய சூரிய கல ஒழுங்கமைப்பிற்கு உரிய ரூபா.2,174,710 வருமானம் திரண்ட நிதியத்தில் சீர் செய்யப்படாது மீளாய்வாண்டில் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | மீளாய்வாண்டுக்கு உரித்தல்லாத வருமானங்கள் திரண்ட நிதியத்தில் சீர் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஔ) | சூரிய கல ஒழுங்கமைப்பில் இருந்து மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா.1,149,681 வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் நிதிக் கூற்றின் ஆரம்பம் மீதியை சரி செய்வதன் மூலம் உரிய சீர் செய்தலை மேற்கொள்ளப்படும் என்பது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (க) | பொது வியாபார நிலைய சூரிய கல ஒழுங்கமைப்பிற்கு உரியதான மீளாய்வாண்டில் மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா.30,372 வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய வருமானம் சரியாகக் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ங) | 2013 தொடக்கம் 2019 காலப் பகுதியினுள் ரூபா.46,847,572 பெறுமதியான கிடைத்த நன்கொடைகள் திரண்ட நிதியத்தில் சீர் செய்யப்படாது மீளாய்வாண்டில் மூலதன மானியங்களாக காட்டப்பட்டிருந்தன. | எதிர்வரும் வருடத்தில் நிதிக் கூற்றில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | முன்னைய ஆண்டுகளுக்கான கொடுக்கல் வாங்கல்கள் திரண்ட நிதியத்தில் சீர் செய்யப்படுதல் வேண்டும். |
| (ச) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் LDSP செயல் திட்டத்தின் கீழ் ரூபா.15,385,590 நிதி கிடைத்தமை மூலதன மானியங்களாக இனம் காணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மூலதன மானியங்களின் பெறுமதி சரியாக இனம் காணப்படுதல் வேண்டும். |
| (ஞ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கு உரியதான மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா.46,816,932 பெறுமதிக்கான வீதி, மதகு, நெடுஞ்சாலைகள் என்பவற்றுக்கான மீளாய்வாண்டு தேய்மானம் ரூபா.4,681,693 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் நிதிக் கூற்றுக்களின் ஆரம்ப மீதியில் குறித்த மீதியில் உரிய சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என்பது. | தேய்மானம் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ட) | சபையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட 05 கடன் வகைகளில் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி ரூபா.35,256.890 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலத்தில் செலுத்தப்பட வேண்டிய ரூபா.15,656,623 கடன் நடைமுறைப் பொறுப்பாக நிதிக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் நிதிக் கூற்றில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நீண்ட காலப் பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ண) | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் வடமத்திய மாகாண சபையிடமிருந்து கிடைத்திருந்த ரூபா.9,850,000 பெறுமதியான இயற்கை உர உற்பத்தி இயந்திரம் மற்றும் கழிவு உலை என்பன சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | சொத்துக்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (த) | 05 நடைமுறைக் கணக்குகளுக்கு உரியதான மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் வங்கியில் வைப்பிலிடப்பட்ட ஆனால் 06 மாதங்கள் கடந்து இருந்த | 2023 ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் சீர் செய்தல்களை சமர்ப்பிப்பதற்கு | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போதிலும் மாற்றப்படாத ரூபா.2,437,722 பெறுமதியான 65 காசோலைகள் தொடர்பில் குறித்த கணக்குகளில் சீர் செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கின்றேன். | |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய வடிகால் வாகன சேவைக் கட்டண அட்டவணைக்கு அமைய ரூபா.1,144,000 ஆக இருந்த போதிலும் விரிவான வருமானக் கூற்றுக்கு அமைய அது ரூபா.364,100 ஆக இருந்ததால் ரூபா.779,900 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொளளப்படுகின்றது என்பது. | நேரொத்த அறிக்கைகள் அட்டவணைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்கு அமைய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவை ரூபா.14,660,012 ஆக இருந்த போதிலும் அத்தினத்தில் வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றுக்கு அமைய மீதி ரூபா.14,389,322 ஆக இருந்ததால் ரூபா.270,690 வித்தியாசம் காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றில் சீர் செய்தலாகக் காட்டப்பட்டிருந்த ரூபா.35,673,375 மீதி என்ன என்பது தொடர்பில் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் பேணப்பட்டு வரும் 06 அரச வங்கி நடைமுறை கணக்குகளுக்கு உரியதான மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.24,420,802 தொகை இனம் காணப்படாத செலவுக் குறிப்புகள் மற்றும் ரூபா.12,730,391 இனம் காணப்படாத வரவு குறிப்புகள் என்பன | செலவு வகைப்படுத்தல் குறிப்பை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | விரிவான வருமானக் கூற்று செலவு வகைப்படுத்தலுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

காணப்பட்டன. அதில் பல வருடங்களாக பேணப்பட்டு வரும் பெறுமானங்கள் உள்ளதுடன் அது தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் 396 (இ) | 05 நடைமுறை கணக்குகளுக்கு உரியதான மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா.8,818,360 பெறுமதியான 48 காசோலைகள் தொடர்பில் குறித்த கணக்குகளில் சீர் செய்தல்கள் இடம்பெற்று இருக்கவில்லை. | இதுவரையில் நிதிப் பிரமாணம் 396(இ) இற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | நிதிப் பிரமாணம் 396 (இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வங்கி கணக்கு இணக்கக் கூற்றில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 09/2009 கொண்ட சுற்றறிக்கையின் இலக்கம் 2(iv) ஆம் பந்தி | விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வருகை மற்றும் வெளிச் செல்லும் நேரங்கள் உறுதிப்படுத்தப்படாத 08 சந்தர்ப்பங்களில் ரூபா. 90,710 மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது சரி செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்பட வேண்டும். |
| (ii) | 2021 திசெம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 13/2008(vi) கொண்ட | நகர ஆணையாளருக்கு மாதாந்த உரித்துடைய எரிபொருள் கொடுப்பனவான 135 லீட்டரை விஞ்சி ரூபா. 357,920 பெறுமதியான 1216.1 | எரிபொருள் லீட்டர் அளவினை அதிகரித்துக் கொள்வதற்கு | எழுத்து மூல அனுமதியைப் பெற்றுக் கொண்ட கடிதம் சமர்ப்பிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை | லீட்டர் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது. | கௌரவ ல. ஆளுநரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.34,570,337 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா.46,807,371 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

நகர பிதாவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வழி | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீத வரி மற்றும் வரி | 119,962,000 | 78,121,540 | 79,929,199 | 110,918,319 | 108,256,000 | 77,094,050 | 60,469,287 | 112,725,978 |
| (ii) | வாடகை | 82,273,038 | 78,236,585 | 67,730,749 | 69,056,120 | 106,080,000 | 36,763,000 | 53,410,265 | 58,550,284 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 32,413,000 | 29,192,086 | 36,658,002 | 6,255,379 | 204,293,000 | 56,670,902 | 61,306,331 | 13,721,295 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 94,265,600 | 122,695,556 | 119,149,240 | 27,831,062 | 47,309,000 | 15,377,985 | 29,177,135 | 24,284,746 |
| | | 328,913,638 | 308,245,767 | 303,467,190 | 214,060,880 | 465,938,000 | 185,905,937 | 204,363,018 | 209,282,303 |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | 2022 ஆம் ஆண்டுக்காக ரூபா.76,960,000 வீதவரி வருமானத்தினை சேகரிப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.30,972,323 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய வருமான சேகரிப்பு செயலாற்றுகை 40 சதவீதத்திற்கும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. | நாட்டில் நிலவிய பொருளாதார சுகாதார மற்றும் அரசியல் காரணங்களினால் தாக்கம் ஏற்பட்டிருந்தது என்பது. | நிலுவை வீதவரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | புதிய நிர்மானங்கள் அல்லது மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் 05 வருடங்களுக்கு ஒரு முறை சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2009 ஆம் ஆண்டு மதிப்பீட்டிற்கு அமைய 2022 ஆம் ஆண்டிலும் வீத வரி அறவிடப்பட்டு வந்துள்ளது. | புதிதாக மதிப்பீடு செய்வதற்கு அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்பது. | புதிய மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையைத் துரிதப்படுத்துதல் வேண்டும். |
| (iii) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252(1)(அ) பிரிவின் பிரகாரம் ரூபா.110,918,319 பெறுமதியான நிலுவை வீத வரியினை அறவிடுவதற்காக 01 வருடம் தொடக்கம் 10 வருட காலம் கடந்திருந்த போதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதார, சுகாதார மற்றும் அரசியல் நிலைமையின் அடிப்படையில் சட்டரீதியான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பது மற்றும் இறுதி அறிவிப்பு மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்பது. | நிலுவை வீத வரியினை அறவிடுவதற்காக மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் செயல்படுதல் வேண்டும். |
| (iv) | மாநகர சபை அதிகார பிரதேசத்தில் கழிவுகளை பெற்றுக் கொடுக்கும் 33 வணிக நிறுவனங்களில் 01 தொடக்கம் 03 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தொடக்கம் அறவிடப்பட வேண்டிய கழிவு வரி ரூபா.2,859,199 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | கழிவு வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மாநகர சபைக்குச் சொந்தமான கடைகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பொது சந்தை I ஆம் கட்ட மற்றும் II கட்ட கடைகள் மற்றும் ஏனைய கடைகளுக்காக 1999 ஆம் ஆண்டு மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வாடகை அறவிடப்பட்டு வந்துள்ளது. | புதிய மதிப்பீட்டுப் பெறுமதி விலை மதிப்பு திணைக்களத்திடமிருந்து 2022 இறுதி காலாண்டில் வழங்கப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டுப் பெறுமதிக்கு அமைய நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கடைகளைக் குத்தகைக்கு வழங்கியதற்காக 01 இற்கும் 08 இற்கும் இடைப்பட்ட வருட காலம் தொடக்கம் அறவிடபடாது காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா.61,623,610 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நீதிமன்றம் தீர்ப்பினை பெற்றுக் கொண்டதன் பின்னர் மேலதிக வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் நிலுவை வாடகை அறவிடப்படுதல் வேண்டும். |
| (iii) | சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியதற்காக அறவிடப்பட வேண்டி இருந்த நிலுவை வாடகை ரூபா.1,694,554 மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சொத்து குத்தகை நிலுவை வாடகை அறவிடப்படுதல் வேண்டும். |

**(இ) அனுமதிப் பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 247அ(2) ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் 2021 திசெம்பர் 24 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2260 கொண்ட அனுராதபுர மாநகர சபை வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட உணவகங்களின் வருமானத்தில் 01 சதவீத கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும். அதே போன்று 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் 61(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா மத்திய நிலையங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட்டு கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 33 நிறுவனங்களிடம் இருந்து இந்த 01 சதவீத கட்டணத்தை அறவிடுவதற்கு மாநகர சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றுலா வியாபாரத்தில் நிலவிய வருமான வீழ்ச்சி காரணமாக கடுமையான சட்ட திட்டங்களை விதித்து அறவிடப்பட வேண்டாம் எனும் கோரிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு மட்டும் அனுமதிப் பத்திர கட்டணம் அறவிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 திசெம்பர் 24 ஆம் திகதி இடப்பட்ட அனுராதபுர மாநகர சபை இலக்கம் 2260 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டுக்காக 05 தனியார் வைத்தியசாலைகளில் இருந்து ரூபா.200,000 உம் 09 ஆய்வு கூடங்களில் இருந்து ரூபா.45,000 உம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இந்த கட்டணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | 2021 திசெம்பர் 24 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 2260 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தீ பாதுகாப்பு சேவைக் கட்டணம் தொகுதி 33 இன் கீழ் ரூபா.600, ரூபா.2,500, ரூபா.10,000, மற்றும் ரூபா.15.000 வீதம் மதிப்பீட்டுக்கு அமைய அறவிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில் மற்றும் வணிக வியாபாரங்களிடம் இருந்து அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதனால் ரூபா.5,000,000 ஐ விஞ்சிய வருடாந்த வருமானத்தை சபை இழந்திருந்தது. | -மேற்படி- | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அறவிடப்படுதல் வேண்டும். |
| (iv) | சபையின் அதிகார பிரதேசத்தில் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்களின் மூலம் வியாபார அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாததால் 01 வருடத்திற்கும் 03 வருடத்திற்கும் இடைப்பட்ட காலப் பகுதி தொடக்கம் ரூபா.4,719.139 அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிலுவை வியாபார அனுமதிப் பத்திர வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (v) | மாநகர சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 2020 தொடக்கம் 2022 காலப் பகுதிக்கு உரியதான அறவிடப்பட வேண்டிய விளம்பரப் பலகைக் கட்டணம் ரூபா.1,536,240 தொகை 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிலுவை விளம்பரப் பலகை வருமானத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானங்கள்**

**நீதிமன்ற தண்டப்பணம்**

| | | |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.1,475,079 தொகையான நீதிமன்ற தண்டப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பெற்றுக் கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் . |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**துணைச் சட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் 34 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்கான துணைச் சட்டம் விதிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விதிக்கப்பட்டிருந்த துணைச் சட்டங்கள் தொடர்பான விவரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் துணைச் சட்டத்தினை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 இனம் காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை உறுப்பினரின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட ரூபா.94,500 பெறுமதியான எட்டு வகையான புத்தபங்கள் அழிவடைற்திருந்த போதிலும் இழப்புக்களை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொளடளப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கைகாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | இழப்புக்களை அறவிடுவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட தஹய்யாகம அடுக்கு மாடி வீடு தொகுதி நிர்மாணிப்பு செயல் திட்டத்தினை மாநகர சபையின் உத்தியோகத்தர்களுடன் இயந்திர முறையிலான உடன்படிக்கை இன்றி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் வழங்கி இருந்ததுடன் அந்த நிதியினை செலுத்தத் தவறியதால் சபைக்கு ரூபா.255,228 நட்டம் ஏற்பட்டிருந்தது. | கட்டணத்தினைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுர மாநகர சபைக்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லமாகக் காணப்பட்ட இலக்கம் 07 உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் அந்த காணி 50 வருடங்களுக்கும் அதிகமான காலம் தொடக்கம் தனியார் வைத்தியசாலை மற்றும் விசேட வைத்திய சேவை வழங்கும் நிலையமாக நடாத்திச் செல்வதற்காகக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்திடம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக முறையான உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போன்று அதற்காக 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய மதிப்பீட்டு பெறுமதிக்கு அமைய அறவிடப்பட்டிருக்க வேண்டிய ரூபா.9,189,171 நிலுவை வாடகை 2022 ஓகஸ்ட் 31 ஆம் திகதியில் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மேலே குறிப்பிடப்பட்ட உத்தியோகபூர்வ இல்லத்தினை வைத்தியசாலையாக மாற்றுவதற்காக உத்தியோகபூர்வ இல்லத்தின் நிர்மாணிப்பினை மாற்றுதல், அபிவிருத்தி செய்தல் என்பன 50 வருட காலம் தொட்டு | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக மாநகர சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | அனுராதபுரம் மாநகர சபைக்கு சொந்தமான 30.75 ஏக்கர் அளவிலான 28 காணிகளை உற்பத்தி குத்தகை வழங்குதல் தொடர்பில் முறையான குத்தகை உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஆவணங்களை இயற்றப்படுத்துவதற்கும் நிலுவை வாடகை ரூபா.245,000 தொகையினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, குத்தகை ஒப்பந்தம் இற்றைப்படுத்தப்பட்டு, நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கிரிக்குளத்தில் அமைந்துள்ள கழிவு மத்திய நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் இயற்கை உரம் தனியார் நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட போலி விபரங்கள் குறிப்பிடப்பட்ட கொள்கலனில் 40 கிலோ கிராம் வீதம் கொள்கலனிடப்பட்ட இயற்கை உரம் 54000 கிலோ கிராம் களஞ்சியப் படுத்தப்பட்டு இருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டு உள்ளூராட்சி திணைக்களம் சபைக்கு வழங்கி இருந்த ரூபா.710,000 பெறுமதியான கழிவுகளை துண்டாக்கும் இயந்திரம் பயன்படுத்தப்படாது பள்ளத்தாக்கு வளாகத்தில் செயல்பாடு இன்றி காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இந்த இயந்திரத்தைப் பயன்பாட்டிற்கு எடுத்தல் வேண்டும். |

### 3.6 கொள்முதல் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குழு அங்கத்தவராக செயல்பட்ட உறுப்பினர்களுக்கு ரூபா.175,750 மேலதிகமான கொடுப்பனவு செலுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | குழு கூட்ட எண்ணிக்கைக்கு அமைய மட்டும் கொடுப்பனவு வழங்கல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அரச கொள்முதல் வழிகாட்டல் 2006 கொள்முதல் கையோட்டிற்கான மேலதிகம் 25 இன் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொள்முதல்களுக்கு கொடுப்பனவு உரித்தல்லாத போதிலும் சந்தை விலை ஒப்பீட்டு முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 71 கொள்முதல்களுக்காக ரூபா.345,500 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | -மேற்படி- | அரச கொள்முதல் வழிகாட்டல் 2006 இற்கு அமைய செயல்படுதல் வேண்டும். |
| (இ) | புரவர உதானய - 2022 இற்கான விலை மனு கோரும் போது விலை மனு பிணை இன்றியும் மற்றும் நுழைவுச் சீட்டு சரியாக கணக்கீடு செய்யப்படாததாலும் அனுராதபுரம் மாநகர சபையால் ரூபா.3,765,100 வருமானம் இழக்கப்பட்டு இருந்தது. | -மேற்படி- | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டுக்கு அனுராதபுரம் பொது சந்தை ரூபா.5,500,000 இற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் குத்தகைதாரரினால் சந்தை மீண்டும் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதனால் வாரச் சந்தைக்கு மீண்டும் விலை மனு கோரப்படாததால் மாநகர சபைக்கு ரூபா.2,563,415 நட்டம் ஏற்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் அனுராதபுர மாநகர சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் 224 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மேலதிக பதவி அணியினர் 226 காணப்பட்டனர் என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலதிகப் பதவி அணியினுள் அமைய பதவி அணியினர் 182 பேரும், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 18 பேரும் நாளாந்த சம்பளத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் 26 பேரும் அடங்குவர். | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அமைய ஊழியர்களின் நியமனத்தை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் புரவர உதானய இடம் பெற்ற 06 நாள் காலத்தில் இரவு நேரத்தில் நுழைவுச் சீட்டு பரிசோதனை செய்த ஊழியர்களுக்கு ரூபா.2,500 வீதம் கொடுப்பனவும் மாநகர ஆணையாளர், கணக்காளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகிய மூன்று உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது சம்பளத்தில் 75 சதவீதமான ரூபா.152,160 கொடுப்பனவு மாநகர சபையினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக சபையின் அனுமதியினைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இந்த கொடுப்பனவுக்காக சபை அனுமதியைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனுராதபுரம் மாநகர எல்லையினுள் மேற்கொள்ளப்பட்ட அனுமதியற்ற நிர்மாணிப்புகள் காரணமாகப் பாரிய சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டிருந்த போதிலும் அந்த சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக அனுராதபுர மாநகர சபையினால் முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | அனுமதியற்ற நிர்மாணிப்புகள் தொடர்பாகப் பரீட்சிப்பு செய்து தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |